**<u>Sub Court, Eraniel</u>**

**O.S. No. 38/2022**

Date: 18.07.2025.

வா.சா.1 - திரு. குமாரபெருமாள்

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

<u>2 மற்றும் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ–5 பட்டா எண்.8424 ல் முதல் பெயராக கல்படி ஸ்ரீராமர் கோயில் வகைக்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். புலஎண்.42/14 ல் நான் 66 சென்டில் உரிமையிருப்பதாக கூறுகிறேன். அந்த புல எண்ணின் மொத்த விஸ்தீரணம் 66 சென்ட் என்றால், அதுபற்றி எனக்கு தெரியாது. இந்த பட்டா சம்பந்தமாக எந்தவித ஆட்சேபணையும் இன்றுவரை நானோ, எனது மாமியார் ராஜேஷ்வரியோ அதிகாரிகளிடம் தெரிவிக்கவில்லை என்றால், சரிதான். எனது மாமியார் பெயர் மேற்படி பட்டாவில் 2002ம் ஆண்டு சேர்க்கப்பட்டுள்ளது என்று வா.சா.ஆ–5 ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், அதற்கு முன்னரே பழைய பட்டாவில் அவருடைய பெயர் உள்ளது. வா.சா.ஆ–4, பழைய பட்டாவில் பட்டா பெயர் மாற்றத்திற்கான வட்டாட்சியர் உத்தரவு எதுவும் காணப்படவில்லை என்றால், சரிதான். எந்த தேதி எங்களுக்கு பட்டா வழுங்கப்பட்டது என்ற விபரம் வா.சா.ஆ–4 ல் குறிப்பிடவில்லை என்றால், சரிதான். பட்டா புத்தகத்தில் கிரையப்படி என்று எழுதப்பட்டுள்ள விபரம் யாரால் பதிவு செய்யப்பட்டது என்பது குறித்து கையொப்பமும் , அதிகாரியின் சான்றொப்பமும் இல்லை என்றால் சரிதான். அதற்கு முந்தைய பக்கத்தில் விபரங்கள் அழிக்கப்பட்டு, அடித்தலுடன் உள்ளது என்றால், சரிதான். அந்த அழித்தல் மற்றும் அடித்தல் யாரால் செய்யப்பட்டது என்று உரிய அதிகாரிகளின் கையொப்பம் இல்லை என்றால், சரிதான். வா.சா.ஆ–4 ன் முன்பக்கத்தில் எனது

மாமியார் பெயரும் அடித்தல் திருத்தலுடன் தான் காணப்படுகிறது என்றால், சரியல்ல. பட்டா எண்,8424ம் கூட திருத்தம் செய்யப்பட்டு அதன் மேல் எழுதப்பட்டிருக்கிறது என்றால், சரியல்ல. வழக்கிற்காக நானும் எனது மாமியாரும் வா.சா.ஆ 4 யை தயார் செய்திருக்கிறோம் என்றால், சரியல்ல. இதேபோன்று தான் வா.சா.ஆ–4ன் வரிசை 2லும் அடித்தல் திருத்தல்களுடன் பதிவுகள் காணப்படுகின்றன என்றால், சரியல்ல. எனது மாமியாரின் ஊர் மணவிளை. வா.சா.ஆ–6ல் 1987ம் ஆண்டு பட்டா எண்.8424ற்கு உட்பட்ட சொத்திற்கு எனது மாமியார் வரி செலுத்தியதாக விபரங்கள் காணப்படவில்லை என்றால், சரிதான். சர்வே எண்42/14ற்கு பட்டா எண்.8424 தான் ரீசர்வே முதல் தற்போதுவரை இருந்து வருகிறது என்றால், சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ 7ல் பட்டா எண்.8424 குறிப்பிடபடவில்லை என்றால், சரிதான், ஆனால் புல எண் குறிப்பிடப்பட்டிருக்கிறது. தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.8 ல் பட்டா எண்.8424 மற்றும் புல எண்42/14ம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ 6 மற்றும் வா.சா.ஆ–7 புலஎண்.42/14க்கு விஸ்தீரணம் 28.5 என்று குறிப்பிட்டு வீதம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.8 முதல் வா.சா.ஆ–10 மற்றும் வா.சா.ஆ–13 வரையுள்ள ஆவணத்திற்கு மேற்படி புலத்திற்கு விஸதீரணம் முழுவதுமாக குறிப்பிடப்பட்டு, வீதம் என்று குறிப்பிடவில்லை என்றால், சரிதான். அந்த ஆவணங்களில் பட்டா எண்.8424 என்றும் சேர்க்கப்பட்டுள்ளது என்றால், சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.11ல் புலஎண், விஸ்தீரணம் குறிப்பிட்டு , வீ என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். அது வீதம் என்றால், அது சரிதான். இவ்வாறு எனது தரப்பு

ஆவணங்களில், சிலவற்றில் முழு விஸ்தீரணம் குறிப்பிட்டும் சிலவற்றில் வீதம் என்று குறிப்பிட்டும் குளறுபடிகளுடன் தீர்வை ரசீதுகள் செலுத்தப்பட்டிருக்கின்றன என்றால், சரியல்ல. இந்த வழக்கில் கோயிலுக்காக நிர்வாக அலுவலர் நியமிக்கப்பட்ட விபரம் எனக்கு தெரியும். 1997 ல் இருந்து கோயிலும், கோயில் இடமும் நிர்வாக அலுலவரால் நிர்வகிக்கப்படுகிறது என்றால், கோயில் நிர்வாகம் அவ்வாறு செய்யப்படுகிறது, இடத்தை பற்றிய விபரங்கள் தெரியாது. 2ம் பிரதிவாதி அலுவலகம் எங்கு உள்ளது என்றோ, அவருடைய பங்கு என்ன என்ற விபரங்கள் எனக்கு தெரியாது என்றால், சரிதான். எனவே வழக்கில் 2ம் பிரதிவாதி மற்றும் அவருடைய வகையாட்களால் தொந்தரவு ஏற்பட்டதாக வழக்கு மூலம் ஏற்படுத்தியிருப்பது , உண்மைக்கு மாறானது என்றால், HR&CE என்று போர்டில் குறிப்பிடப்பட்டிருந்தது. அந்த போர்டில் சொத்தின் விபரங்கள், புலஎண்கள் குறிப்பிடப்பட்டு திருக்கோயிலுக்கு உரிமையானது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். அந்த கோவிலை இந்த வழக்கில் கட்சியாக சேர்க்கவில்லை என்றால், சரிதான். நானும் எனது மாமியாரும் தேவையான தரப்பினை வழக்கில் கட்சி சேர்க்காமல் கற்பனையாக வழக்கு மூலத்தை அடிப்படையாக கொண்டு, நீதிமன்றத்தை ஏமாற்றி தீர்ப்பு பெற முயல்கிறோம் என்றால், சரியல்ல. இந்த வழக்கின் வாதி தூய்மையான கரங்களுடன் நீதிமன்றத்தை நாடவில்லை என்றால், சரியல்ல. இந்து சமய அறநிலையதுறை ஆளுகைக்கு உட்பட்ட பொது

சமய நிறுவனத்தின் அசையா சொத்துகளை அபகரிக்கும்நோக்கத்துடன் இந்த வழக்கு செய்வதால் நான் எந்த பரிகாரமும் கோர தகுதியில்லை என்றால், சரியல்ல.

1ம் பிரதிவாதியால் மேற்படி குறுக்கு விசாரணை Adopt செய்யப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
இரணியல்.